# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

2024 ஏப்பிறல்

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**பாரம்பரிய புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் போது பல துறைகள் முழுவதும் நடவடிக்கைகள் மெதுவடைந்த பருவகால விதத்தின் பின்னர், கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு - கட்டடவாக்கம்), 2024 ஏப்பிறலில் 31.9 சுட்டெண் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்தது.** முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் சுருக்கத்தினை இது எடுத்துக்காட்டுகின்றது. பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடுவதற்கிணங்க, நீடித்த புத்தாண்டு விடுமுறை காரணமாக மாதகாலப்பகுதியில் அநேகமான கட்டடவாக்க இடங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்து, மாதத்திற்குமாத இவ்வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

குறைந்த பணி நாட்களுடன்கூடிய ஏப்பிறலில் புதிய கட்டளைகள் குறைவடைந்தன. எனினும், விலைக்கோரல் வாய்ப்புக்களில் காணப்படுகின்ற அதிகரித்த போக்கு வரவிருக்கும் மாதங்களில் தொடர்ந்தும் நிகழுமென அநேகமான பதிலிறுப்பாளர்கள் நம்பிக்கையுடன் இருந்தனர். மேலும், சந்தையில் பங்கேற்பு நிறுவனங்கள் தீவிரமான போட்டியை பரந்தளவில் உச்சப்படுத்தின. மொத்த நடவடிக்கைகள் மற்றும் புதிய கட்டளைகள் என்பவற்றில் வீழ்ச்சிக்கிசைவாக தொழில்நிலையும் கொள்வனவுகளின் அளவும் மாதகாலப்பகுதியில் குறைவடைந்தன. மேலும், ஒட்டுமொத்த விலை மட்டங்களின் வீழ்ச்சியடைகின்ற போக்கு ஏப்பிறலிலும் தொடர்ந்து இடம்பெற்றது. அதேவேளை நிரம்பலர் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் ஒப்பீட்டளவில் மெதுவான வீதத்தில் நீட்சியடைந்தது.

**கொமுசு தொகுப்பு: கட்டடவாக்க அளவீடு**


| மாறி | மாச் | ஏப் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **55.9** | **31.9** | - | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| புதிய கட்டளைகள் | 51.5 | 37.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 44.1 | 38.9 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 55.9 | 29.2 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 52.9 | 51.4 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டடவாக்கக் கருத்திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பின் பிரதான காரணமாக அடுத்த மூன்று மாதங்களுக்கான தொழிற்துறை எதிர்பார்ப்புக்கள் சாதகமாகக் காணப்படுகின்றன.

**கொமுசு**
**கட்டடவாக்கம் மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**31.9**
**2024 ஏப்பிறல்**

கொ.மு.சு - கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தொகுப்பு - கட்டடவாக்கம்

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | சீர்குலைந்துள்ளது, உயர்வான வீதத்தில் |
| பிரான்ஸ் | சீர்குலைந்துள்ளது, மெதுவான வீதத்தில் |
| ஜேர்மனி | சீர்குலைந்துள்ளது, உயர்வான வீதத்தில் |
| அயர்லாந்து | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| இத்தாலி | மேம்பட்டிலிருந்து சீர்குலைந்துள்ளது |
| ஐக்கிய இராச்சியம் | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 மே 30 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**முறையியல்**
சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.
கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் அளவு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.